**செப்டம்பர் 10**

## புனித தொலந்தினோ நிக்கொலாஸ் (1245 – 1305)

இவருடைய பெற்றோர் மீரா நகரின் ஆயரான புனித நிக்கொலாஸ் என்பவரைப் பார்த்துச் செபித்ததினால் இவர் பிறந்தார். எனவே ஆயரின் பெயரையே இவருக்கு அளித்தார்கள். சிறு வயதிலிருந்தே இவர் புண்ணியவானாக வாழ்ந்தார். ஏழு வயதிலிருந்தே வாரத்தில் சில நாட்கள் ஒரு சந்தி பிடிப்பார். இவர் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் போது இவரது திறமையைக் கண்டு உலக இரட்சகரது ஆலயத்தில் இவருக்கு ஒரு வேலை கொடுத்தார்கள். இந்த வேலை இவருக்குப் பிடித்தமாக இருந்தது. ஏனெனில் இரவும் பகலும் கடவுளுக்கு சேவை செய்தார். உலக மகிமை பெருமை மறைந்து போகும் என்பதைப் பற்றிய மறையுரை ஒன்றைக் கேட்டதும் இவர் உலகத்தைத் துறந்து சந்நியாசி ஆனார். தாழ்ச்சியும், சாந்தமும் இவரது முக்கியமான புண்ணியங்களாகும். குருப்பட்டம் பெற்றபின் இறைவனது வார்த்தையை ஒவ்வொரு நாளும் போதிப்பார். இவர் சிறந்த பிரசங்கி என்னும் செய்தி எங்கும் பரவியது. நெடுநேரம் பாவசங்கீர்த்தனம் கேட்பார். மக்களை மோட்சம் சேர்க்க வேண்டும் என்பது இவரது ஏக நோக்கமாக இருந்தது. நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் செபிப்பார். தியானிப்பார். ஆண்டவர் பட்ட பாடுகள் மீது இவருக்கு மிகுந்த பக்தியுண்டு. உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு எல்லையற்ற இரக்கத்துடன் உதவி செய்வார். இவருக்கு பல கொடிய நோய்கள் வந்தது. இவர் சாகக் கிடந்தார். அப்பொழுது உண்மையான சிலுவையின் புனித பண்டத்தை அரவணைத்து “ஓ, புனித சிலுவையே, வாழ்க. உலகின் மீட்புக் கிரயமான இயேசு உன் வழியாக என்னை என் ஆன்மாவின் சத்துருவிடமிருந்து காப்பார்” என்றார்.

**சிந்தனை:**

உத்தரிக்கிற ஸ்தல ஆத்துமாக்களுக்கு உதவி செய்யும் போது சிறையில் இருக்கும் இயேசுவின் இச் சகோதரர்களுக்கே உதவி செய்கிறோம் என்பதை நாம் ஒரு போதும் மறக்கக்கூடாது.

**செபம்:**

நித்திய பிதாவே உத்தரிக்கிற சிறையில் இருக்கிறவர்களின் பாவங்களுக்குப் பரிகாரமாக இயேசுவின் திரு இரத்தத்தை உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன்.